**2026 ஆகஸ்ட் மாதம் 12- ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 4/2025**

2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12- ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW4 (LW4) - முத்துப்பாண்டி |
| தகப்பனார் பெயர்: | சின்னச்சாமி (எ) பரமத்தேவர் |
| ஊர்: | சின்ன ஓவுலாபுரம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 63 |

12.08.2026

(எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு, அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:-**

1. நான் தற்சமயம், தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்ன ஓவுலாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். 26.02.2024 ம் தேதி சுமார் இரவு 7.00 மணிக்கு சின்ன ஓவுலாபுரம், பேருந்து நிறுத்தம் அருகில் மொக்கைப்பாண்டி வீட்டின் அருகில் உள்ள டீக்கடையில் டீ அருந்திக் கொண்டிருந்தேன். அப்போது சத்தம் கேட்டது, சென்று பார்த்தேன். உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று எதிரி கார்த்திக்கேயன், மொக்கைப்பாண்டியை குத்தினார். அதை நான் பார்த்தேன்.

2. முதுகு மற்றும் வயிறு ஆகிய பகுதிகளில் குத்தினார். ரத்தக்காயம் ஏற்பட்டது. மாவீரன் வந்தார். கார்த்திக்கேயன் குத்திவிட்டு ஓடிவிட்டார். நாங்கள் சம்பவ இடத்தில் அங்கிருந்தோம். மொக்கைப்பாண்டியை ஆம்புலன்ஸில் ஏற்றி சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். நானும், மாவீரன், மாவீரனின் மனைவி மருத்துவமனைக்கு உடன் சென்றோம். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 கத்தியால் எதிரி மொக்கைப்பாண்டியை குத்த பயன்படுத்திய கத்தியாகும். அ.சா.பொ.2 சட்டை மொக்கைப்பாண்டி சம்பவத்தின்போது அணிந்திருந்த சட்டையாகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

3. நான் எந்த தெருவில் குடியிருந்து வருகிறேன் என்றால் இந்திரா காலணி ஆகும். சம்பவம் நடந்த தெரு என்ன என்றால் சுப்பிரமணிய கோவில் தெருவாகும். இந்திரா காலனிக்கும், சுப்பிரமணிய கோவில் தெருவிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1/2 கி.மீ தூரம் ஆகும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் நான் விவசாயம் செய்து வருகிறேன். மாவீரன் எனக்கு உறவினர் என்றால் இல்லை, ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர், ஒரே ஊரைச் சேர்ந்தவர் ஆவார். மொக்கைப்பாண்டி என்ன உறவுமுறை என்றால் எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர் ஆவார்.

4. சம்பவ சமயத்தில் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றாலும், என்ன சத்தம் கேட்டு வந்தேன் என்றால் ஐயோ, அம்மா என்று சத்தம் கேட்டது, நான் சென்ற பிறகு தான் எதிரி மொக்கைப்பாண்டியை குத்தினார். சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் மாவீரன், பின்னர் மாவீரன் மனைவி ஆகியோர் இருந்தார்கள். சம்பவ இடத்திற்கு போலீசார் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்னர் வந்துவிட்டார்களா என்றால் இல்லை. மருத்துவமனைக்கு சென்ற பின்னர் போலீசார் வந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் பார்த்தப்போது

நான் சம்பவ இடத்தில் இருந்தேன் என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸில் யார் யார் சென்றோம் என்றால் நான், மாவீரன், மாவீரனின் மனைவி ஆகியோர் சென்றோம். சம்பவ இடத்தில் நான் சத்தம் கேட்டு சென்ற பின்பு மாவீரன் வந்தாரா என்றால் எனக்கு பின்னாலே வந்தார்.

5. எதிரி என்ன நிறமுடைய சட்டை அணிந்திருந்தார் என்றால் ஞாபகமில்லை. நான் உண்மையில் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், நான் வேறு தெருவை சேர்ந்தவர் என்பதால் சம்பவ இடத்தில் இருந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும், உண்மையில் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் எதிரி என்ன நிறமுடைய சட்டை அணிந்திருப்பார் என்பதை கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. யாருடைய டீக்கடையில் டீ அருந்திக்கொண்டிருந்தேன் என்றால் ராஜாமணி டீக்கடையாகும்.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 12.08.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.12 13:10:53 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
12.08.2026